திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மாவட்டவாரியாக தகவல் வந்திருந்தால் அதை வெளியிடுவதில் என்ன கஷ்டம் ஏற்படும் என்பதை என்னைப் போன்றவர்களால் புரிந்து கொள்ளமுடியவில்லை. ஆகவே மாவட்டவாரியாக விவரங்களைத் தெரிவிப்பது பொருத்தமாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக எவ்வளவு சங்கங்கள் என்று கேட்கப்பட்டிருந்தால் அதற்கான குறிப்புகளை அதிகாரிகள் எடுத்து வைத்திருக்க முடியும். சில நேரங்களில் அமைச்சர்கள் இப்படிப் பொதுவாகக் கேள்வி வருகிற நேரத்தில் மாவட்ட வாரியாகக் குறிப்புகள் வேண்டும் என்று கேட்டுப் பெறுவதும் உண்டு. நேரமில்லாத காரணத்தால் அதைப் பெற்றிருக்காமல் இருக்கக்கூடும். ஆகவே தனிக்கேள்வி போட்டால் விவரங்கள் சேகரிக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த விவரம் இல்லை என்று சொன்னார். இருந்தும் கொடுக்கவில்லை என்று சொல்லவில்லை.

Huts in Island Ground area.

*189 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether a large number of huts have been removed from the Island grounds around March 1973 by the Slum Clearance Board; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) 1973 மார்ச் மாதத்தில் தீவுத் திடலின் அருகாமையிலுள்ள கூவம் நதிக் கரையோரத்தில், புதிதாகப் பலர் குடிசைகளை அமைக்கத் தொடங்கினர். குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அருகாமையில் கட்டப்படும் புதிய கட்டிடங்களில் குடியிருப்புகளைப் பெறுவதே அவர்களது நோக்கமாக இருந்தது. ஆகவே அவர்களை குடிசை மாற்று வாரியம் 24—3—1973 அன்று மேற்படி இடத்திலிருந்து வெளியேற்றியது. அப்படி வெளியேற்றப்பட்ட சுமார் 55 குடும்பங்களுக்கு கோட்டூர்புரத்தில் தீப்பிடிக்காத வீடுகளில் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

THIRU N. DENNIS: Sir, may I know whether steps of this kind would be taken in other similar places ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் 55 குடும்பங்களுக்கு கோட்டூர்புரத்தில் தீ பிடிக்காத வீடுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

Visit of World Bank Officials.

*190 Q.—THIRU R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the officials of the World Bank visited the Projects of Slum Clearance Board in December 1972; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) 1972-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் எட்டாம் தேதியன்று உலக வங்கியைச் சேர்ந்த திரு. ஜோஷென்கிராஸ்கே அவர்களும், திரு. பில்செல் எச். அலிஸ்பா அவர்களும் தங்களுடைய சென்னை சுற்றுப் பயணத்தின்பொழுது குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் திட்டப் பகுதிகளைப் பார்வையிட்டார்கள். வாரியத்தின் பணியை மிகவும் பாராட்டியுள்ளார்கள். அதற்குரிய சான்றுகளும் அளித்திருக்கிறார்கள்.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவரவர்களே, சிட்டி பகுதிகளைப் பார்வையிட்டு, சான்றுகள் வழங்கியிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சிட்டியில் கட்டப்பட்டிருக்கும் வீடுகளைப் பார்வையிட்டுத்தான் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி மாவட்ட வாரியாக அந்தத் திட்டத்தை விரிவுபடுத்த ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியம் சென்னையில் தான் பணியாற்றுகிறது. வீட்டு வசதி வாரியம் மாவட்ட அளவில் முடிந்த அளவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகையின் மூலம் குடிசைப் பகுதிகளை மாற்றி வீடுகளைக் கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

Lands for Slum Clearance schemes.

*191 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) the details of lands given free to the Slum Clearance Board ;

(b) the extent of land given ; and

(c) their value ?